DBCY publication
போஸ்கோ இலக்கிய இதழ்
தொகுதி: 01 இதழ்: 01 ஜீலை2021 29-35
ISSN :XXX-XXXX

# திலகவதி கதைகளில் தாய்மை - ஓர் உளவியல் பார்வை

**மு.ராதா** எம்.ஏ., எம்.எட்., எம்.ஃ.பில்.,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
திருவள்ளுவர் பல்கலைக்கழகம்,
இசுலாமியாக் கல்லூரி (தன்னாட்சி),
வாணியம்பாடி,
திருப்பத்தூர் மாவட்டம்

**Abstract** –

Themes in the history of Tamil literature adaptto the modern context. There is nothing comparable to motherhood in this world. The role of motherhood is one of the most inspiring in a woman's life, as a daughter, as a sister, as anorganizer, as a grandmother who matures in the home as a friend, as a teacher who leads the way in the warmth of experiences. Motherhood can also be approached psychologically classic feelings. The role of the mother is topped by the role of women. Sacrifice, endurance and selflessness are praised by psychologists as the highest qualities of a mother.

**ஆய்வச்சுருக்கம்:**

தமிழ் இலக்கிய வரலாற்றில் கருக்பொருள்கள் அவ்வக்காலச் சூழலுக்கேற்ப அமைகின்றன. இவ்வுலகில்தாய்க்கு ஈடாக ஒப்பிட எதுவுமே இல்லை. ஒரு பெண்ணானவள் மகளாக, சகோதரியாக, தாயாக, தாரமாக, தோழியாக வீட்டிலுள்ளோரைப் பக்குவப்படுத்தும் பாட்டியாக, அனுபவங்களின் அரவணைப்பில் வழி நடத்திச்செல்லும் ஆசானாக இப்படி தன் வாழ்நாளில் எத்தனையோ பாத்திரங்களில் வலம் வந்தாலும் ‘தாய்மை’ என்ற பாத்திரம்தான் மிக உன்னதமான இடத்தை வகிக்கிறது. தாய்மை என்பது ஓர் உன்னதமான உணர்வாகவே உளவியல் முறையில் அணுகவும் முடிகின்றது. பெண்களின் பங்குநிலைகளில் தாயின் பங்கு நிலையே உயர்ந்த இடத்தைப் பெறுகிறது. தியாகம், பொறுமை, தன்னலமின்மை ஆகிய பண்புகள் தாயின் உயர்ந்த குணங்களாக உளவியலாளர்களால் போற்றப்பட்டு வருகின்றன.

**திறவுச் சொற்கள்**: தமிழ் இலக்கிய வரலாறு, திலகவதி சிறுகதைகள், பெண்மை, உளவியல், திருமண வாழ்க்கை.

போஸ்கோ இலக்கிய இதழ்
தொகுதி: 01 இதழ்: 01 ஜீலை2021 29-35
ISSN :XXX-XXXX

## முன்னுரை

இந்த உலகில் தாய்க்கு ஈடாக ஒப்பிட எதுவுமே இல்லை. ஒரு பெண்ணானவள் மகளாக, சகோதரியாக, தாயாக, தாரமாக, தோழியாக வீட்டிலுள்ளோரைப் பக்குவப்படுத்தும் பாட்டியாக, அனுபவங்களின் அரவணைப்பில் வழி நடத்திச்செல்லும் ஆசானாக இப்படி தன் வாழ்நாளில் எத்தனையோ பாத்திரங்களில் வலம் வந்தாலும் ‘தாய்மை’ என்ற பாத்திரம்தான் மிக உன்னதமான இடத்தை வகிக்கிறது. தாய்மை என்பது ஓர் உன்னதமான உணர்வாகவே உளவியல் முறையில் அணுகவும் முடிகின்றது. பெண்களின் பங்குநிலைகளில் தாயின் பங்கு நிலையே உயர்ந்த இடத்தைப் பெறுகிறது. தியாகம், பொறுமை, தன்னலமின்மை ஆகிய பண்புகள் தாயின் உயர்ந்த குணங்களாக உளவியலாளர்களால் போற்றப்படுகின்றன.

## திலகவதி கதைகளில் தாய்மார்களின் உளவியல்

“தாய் குழந்தையை ஈன்றெடுப்பதற்கு மூலமாக இருப்பவள். அல்லது தாயைப்போலப் பேணி வளர்ப்பவள்… தாயின் பங்கு விலைமதிக்க முடியாதது; வெளிப்படையானது. தாயின் பங்குநிலை உயர்ந்தது. மிக முக்கியமானது” என்று மேர்லி. என்.டி. கிலன்சி என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

“தாய்மை என்பது மனப் பண்புகளின் மலர்ச்சியும் உன்னதங்களும் சேர்ந்த ஒரு மாண்பாகும்” என்பார் இராஜம்கிருஷ்ணன். தாய் குடும்பத்தின் உயிராய், அடித்தனமாய் அமைகின்றார். சமுதாய அமைப்பில் குடும்பம் என்பது மிக முக்கியமானதாகும், முதன்மையானதுமான அங்கமாகும். அதில் முக்கியப் பங்காற்றுகின்ற பெண் தன்னலமற்றவளாக இருக்கிறாள். ஆதலால் சிக்கல்கள் பல அனுபவிக்கிறாள்.

“மிக முக்கியம் வாய்ந்த தாய்மை நிலையை அடைய பெண் தன் உயிரையும் பொருட்படுத்தவில்லை” என்ற சி.எஸ். லட்சுமியின் கூற்றுக்கேற்ப; அரனாகத் திலகவதியின் கல்யாணி என்ற பெண் பாத்திரம்,

திலகவதியின் கதைகளில் இடம்பெறும் குடும்ப உறுப்பினர்களுள்மனைவி முக்கிய இடத்தைப் பெறுகிறாள். குடும்ப அலுவலர் அனைத்தையும்நிர்வாகம் செய்யும் பொறுப்பும் இவர்களிடம் காணப்படுகிறது. படித்தபெண்கள், கல்வியறிவுற்றவர்கள். பணவசதி படைத்தோர்,

போஸ்கோ இலக்கிய இதழ்
தொகுதி: 01 இதழ்: 01 ஜீலை2021 29-35
ISSN :XXX-XXXX

பொருள்ளில்லாதஏழைகள் என பலவகைப்பட்ட பெண்கள் காணப்படுகின்றனர். இவர்களுள்ஒவ்வொருவரும் தனித்த இயல்புடையவராக இருக்கின்றார். நவீனத் தமிழ்இலக்கியத்தில் பெண்களுக்குரிய இடம் குறிப்பிடத்தக்கது. அதிலும் மனைவிஎன்ற பாத்திரம் சிறப்பாகப் புனையப்பட்டுள்ளது.

**தாய் பிறந்தாள்**

கல்யாணி என்னும் பெண் 'தாய் பிறந்தாள்' என்ற கதையில்வருகின்றாள். இவருக்கு குழந்தை இல்லை. அதனால் வருத்தத்தில்இருக்கிறாள். தன் வருத்தத்தை மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன் பேசுகிறாள்.மனைவியைத் தேற்றும் அவள் கணவன் சீனிவாசனிடம் பின்வருமாறுகூறுகிறாள்.அவளைத் தேற்றுகின்ற குரலில் ஆதரவாகச் சொன்னான் சீனிவாசன்:

"இப்ப என்னா வயசாயிடுச்சு நம்பளுக்கு எத்தினியோ பேருக்குகல்யாணமாகி பத்து பன்னெண்டு வருசம் களிச்சுப் புள்ளபொறந்திருக்கு தெரியுமில்ல" (தொகுதி -1,ப.86)என்பது கல்யாணியின் கூற்று.கணவனைத் தேற்றும் கூற்றாக இது அமைந்துள்ளது. சமூகச் சூழலையும்குடும்பச் சூழலையும் நன்கு விளங்கிக் கொண்டு பேசுகின்றவளாக இவள்காணப்படுகிறாள்.

கல்யாணிக்கும் சீனிவாசனுக்கும் இடையே நடந்த உரையாடல் மேலும்முற்றுகிறது. 'தனக்குக் குழந்தையே வேண்டாம்' (தொகுதி-1,ப.86) என்றுகல்யாணியிடம் அவன் கூறுகிறான். அதைக்கேட்ட கல்யாணி உள்ளம்பதைக்கிறாள். சிறிதும் தாமதமின்றிச் சீனிவாசனை நோக்கி,

"அதப்பத்தி உனக்கென்ன கவலை நாந்தான் படிச்சுப்படிச்சுசொல்லியிருக்கினில்லே. அம்மாவும் மாமாவும் சொல்றாப்பல நாஒண்ணும் ரெண்டாங் கல்யாணம் அது இதுன்னு ஒண்ணும் பண்ணிக்கமாட்டேன்னு. இப்பவும் சொல்றேன். எனக்குப் புள்ளயே வேண்டாம்.வேண்டாம். வேண்டவே வேண்டாம்." அவன் தன்னை மறந்துஉறுதியாகச் சொன்னான் ... "மாமாஅந்த வார்த்தையை மட்டும்சொல்லாதீங்க. ஒங்கம்மாவுக்கு மட்டுமில்ல, எனக்குந்தான்புள்ளையில்லங்கறது கொறயாயிருக்குது. எஞ்சோட்டுப்பொண்ணுங்கள்ளாம் கையில ஒண்ணு வவுத்துல ஒண்ணுனு குறுக்கும்நெடுக்குமா போவையிலே என்னமா இருக்குங்கிறீங்க. டவுனு பக்கம்போனா ரிக்சா வண்டி ரொம்ப பொஸ்தகப் பையத்

தொகுதி: 01 இதழ்: 01 ஜூலை2021 29-35
ISSN :XXX-XXXX

தூக்கிட்டுபள்ளிக்கூடத்துக்குப் போற புள்ளயளைக் கண்டா எப்படிஇருக்குதுங்கீறீங்க” (தொகுதி -1,ப.86)எனக் கூறுகின்றாள். இச்சொற்கள் கணவன் மீது அவள் கொண்டிருந்தபேரண்பைக் காட்டுகிறது.

**பெண் - அன்புள்ளம் கொண்டவள்**

கல்யாணி சிறிது காலம் கழித்துக் கருவுற்றாள். அந்த மகிழ்ச்சியைத் தன்கணவனிடம் அன்புடன் பகிர்ந்து கொள்கிறாள். அதனை ஆசிரியர்,நான்காம் மாதம் வயிற்றுக்குள் அசைவு தெரிந்தபோது சொர்க்கம்தனக்குள்ளே குடி புகுந்து விட்டதென்ற சுகத்தில் பூரித்துப்போனாள்கல்யாணி. சந்தோமுமாக வாந்தி எடுத்தாள். நிம்மதியாக மயக்கமானாள்.பெருமையுடன் வீட்டைச் சுத்தம் செய்தாள் நாகம்மாள்… ‘‘ஏம்மாமா,வவுத்துலே இருக்கற புள்ளக்கி இருதயம் இந்த அஞ்சாம்மாசத்திலிருந்து துடிக்குமாமில்ல. நெசமாமுத்தம்மா சொல்றா…ரொம்பப் படபடன்னு துடிச்சா பொம்பளப் புள்ளயாம். நெதானமா துடிச்சாஆம்பளப் புள்ளயாம். சித்த பார்த்துச்சொல்லுங்களேன்” என்றவாறுகணவனின் தலையை வயிற்றில் பதித்தாள் (தொகுதி -1,ப.87)எனச் சுட்டுகிறார்.தொடர்ந்து கல்யாணியின் அன்புள்ளம் வெளியிடப்படுகிறது. அவள்தன் கணவனைப் பார்த்து பலவிதமாகப் பேசுகிறாள். ஒவ்வொன்றும்ஒவ்வொரு வகையில் அவள் அன்பை வெளிப்படுத்துவதாக உள்ளது. தான் ஒருகுழந்தைக்குத் தாயானவள் என்பதையும் அதில் அவன் உள்ளம்மகிழ்ச்சியடையவான் என்பதையும் பின்வருமாறு குறிப்பிடுகிறாள்.

‘‘மாமாஉங்க சாதிசனம் சொல்றாப்பல நீங்க வேறே கல்யாணந்தான்பண்ணிக்குங்களேன். நா வேணா எங்கம்மா வீட்டோடு போய் இருந்திடறேன்” என்பாள் ஒருநாள்… ‘‘ஏம் மாமா அடுத்த புள்ள நல்லபடிபொறக்கும்னு டாக்டரம்மா சொல்லியிருக்கில்ல. நீங்க கேப்பார்பேச்சைக் கேட்டு வேறே கல்யாணம் கில்யாணம் பண்ணிக்கிறமாட்டீங்களே” என்பாள் இன்னொரு நாள்… எல்லாக் கேள்விகளுக்கும்மௌனங் கலந்த புன்னகையை மட்டுமே பதிலாகத் தருவான் சீனிவாசன்… ‘‘மாமாஒங்களாட்டமே மூக்கு, ஒங்களாட்டமா கண்ணு,இதே போல முடி, கையி, காலு எல்லாம் சின்ன சின்னதாக ஒரு குட்டிக்குழந்தையை ஒங்க கையிலே பெத்துத் தராம என் உசுரு அடங்காது. அதுமட்டும்

போஸ்கோ இலக்கிய இதழ்
தொகுதி: 01 இதழ்: 01 ஜீலை2021 29-35
ISSN :XXX-XXXX

மனசில நிச்சயமாப் படுது"என்று சொன்னது மாதிரியே, திருமணமாகி ஐந்தாவது ஆண்டில் கர்ப்பம் தரித்தவளுக்குக் குழந்தை இறந்து பிறக்கிறது; அடுத்த இரண்டாவது ஆண்டில் குழந்தையைப் பெற்று அவள் இறந்துவிடுகிறாள்.

கணவனைப் பிரிந்து வாழும் பெண்ணை அவளுடைய மகள் எதிரிபோல நினைக்கும் நிலை உள்ளது. கொடுமைக்காரக் கணவனிடமிருந்து விவாகரத்துப் பெற்ற பார்வதியுடன் வாழும் சுதா, நீதிமன்ற உத்தரவுப்படி வாரம் ஒருமுறை தந்தையைச் சந்திக்கிறாள். இரண்டாவது திருமணம் செய்து கொண்ட பார்வதி விதவையாகிறாள். பார்வதியின் இந்த நடவடிக்கை சுதாவின் உள்ளத்தில் தாய் மீது பகை ஏற்படுத்துகிறது. சுதா தாய் மீது வெறுப்புக்கொண்டு அவளுடன் வசிக்க விரும்பாமல் பிரிந்து சென்று விடுதியில் தங்கிப் படிக்கிறாள்.[2]

கணவனுடனான இல்வாழ்க்கைத் தோல்வி ஒருபுறமும் மகளின் பகைமை ஒருபுறமாகப் பெண் இரு பக்க உறவிச் சிக்கல்களை எதிர்கொண்டுள்ளாள். காதல் தோல்வியால் வாழும் மகனின் நிலை தாயிக்கு மிகுந்த வருத்தத்தை ஏற்படுத்துகிறது.[3]

இல்வாழ்க்கை - காதல் வாழ்க்கை கசந்தாலும் குழந்தைக்குத் தாயாகிவிட்ட சூழலில், குழந்தையைச் சமூகத்தில் வளர்த்தெடுக்கக் குடும்ப உறவில் இருந்து விலகாமல், செல்வி சேகருடனே இருக்கத் தீர்மானிக்கிறாள். சமூகச் சேவைகளில் ஈடுபட்ட போது, சேகர் அவள் வாழ்வில் தற்செயலான விஷயமாகிப் போகிறான்.[4]

எழில், தன் கடமையும், பொறுப்பும், பெற்றவர்களின் அருமையும் தெரியாமல், தான் தனித்தீவாக வாழ்ந்த மாதிரி, தனிமையால் தற்கொலை செய்து கொள்கிறான். இவ்வாறானத் தற்கொலை மரணத்துக்கு; இளைஞர்களின் முடிவுக்கு முடிவு கட்டும் விதமாக அவனது தாய் அவனை அனாதைப் பிணமாக்கும் நிலைக்குச் சிக்கலாகிறாள்.[5] லட்சுமி, ராஜேஸ்வரியை படிக்க வைத்துத் திருமணமும் செய்து வைக்கிறாள்; தன்னுடைய வறுமையின்போது தன்னுடைய மகள் தனக்கு உதவவில்லையே என்று வருந்துகிறாள்.

**பெண் கல்வி**

‘‘கல்யாணமான பொண்ணு புருஷன் வீட்டுச் சொத்தாம். அவளை அம்மா வீட்டார் எதுக்கும் எதிர்பாக்கறது அயோக்கிய தனமாம். நாம்பப் படிக்க வச்சது பெரிசில்லையாம். அது

தொகுதி: 01 இதழ்: 01 ஜீலை2021 29-35
ISSN :XXX-XXXX

நம்பக் கடமையாம்...”[6] என்பவள், அவளைப் படிக்க வைக்கத் தான்பட்ட கஷ்டங்களை விவரிக்கிறாள். இன்னொருத்தியிடம் ‘பொம்பளப் புள்ளைங்களுக்குப் படிப்பே வாணாம்’ என்கிறாள். பெண் கல்வி வேண்டும் என விரும்பும் திலகவதி, அவள் கணவன் மூலமாக, அந்தப் பெண்ணும் படிக்கட்டும்; முன்னுக்கு வரட்டும்; ஆனால் நம்முடைய மகளைப் போல் நடந்துகொள்ள மாட்டாள் என நம்புவோம் என்று கூறுவதாய்ப் படைத்துப் பெண் கல்வியின் அவசியத்தை எடுத்துரைத்து விடுகின்றார். மேலும் பெண் கல்வியில் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் விதமாக,

“புள்ளங்களை நான் ஆசைப்பட்டுப் பெத்தேன் என்னால முடிஞ்ச அளவு அவுங்கள முன்னுக்குக் கொண்டு வரணும்னு நெனச்சேன். செஞ்சேன். அவுங்க எனக்குப் பிற்காலத்துல எதையும் செய்வாங்கன்னு நெனச்சு செய்யலே”[7] என்று எழுபது வயதாகியும், தானே உழைத்து சாப்பிடும் வள்ளியம்மாள், பிரேமாவிடம் எடுத்துரைக்கிறாள். இந்தியப் பண்பாட்டில் தாய் பற்றிய மிகையுணர்ச்சிக்கு ஓர் இடம் உண்டு. சமூகவியல் நோக்கில் இயல்பு மீறிய இத்தகைய சித்திரிப்புகள் பெண்ணடிமைத் தனத்தையே வலியுறுத்துகின்றன எனலாம்.

## தொகுப்புரை

பெண்ணைத் தாயாகப் பார்ப்பது என்பது சமுதாயத்தில் நன்றாக இருந்தாலும் இதனை உளவியல் பார்வையில் அவளது அடிமை விலங்கின் முதல் கண்ணியாக அதை அடையாளம் காணலாம். தாய்மை என்ற கருத்துருவப் பின்னணிதான் கண்ணிமை, கற்பு, திருமணம், குடும்பம், உறவு போன்ற பல நிலைகளுக்குக்கான ஆதாரமாகக் காட்டப்படுகிறது. தாய்மை உலகில் அன்பு, கருணை மட்டுமே உண்டு. தியாகம் உண்டு என்ற சித்திரிப்புகளால் தாய்மை போற்றப்படுகிறது என்ற கருத்தைப் பெறப்பட்டுள்ளது.

## சான்றெண் விளக்கம்

1. திலகவதி, ‘தாய் பிறந்தாள்’, திலகவதி கதைகள்-1, ப.91.
2. திலகவதி, ‘நேசத்துக்குரிய எதிராளி’, திலகவதி கதைகள்-2, பக்.397-408.
3. திலகவதி, ‘காற்றோடு திரிந்து’, மே.கு.நூ., பக். 346-355.
4. திலகவதி, ‘கூடாகி வந்ததொரு...’, திலகவதி கதைகள்-1, பக்.30-38.

போஸ்கோ இலக்கிய இதழ்
தொகுதி: 01 இதழ்: 01 ஜீலை2021 29-35
ISSN :XXX-XXXX

5. திலகவதி, ‘வளர்த்தது ஒரு நச்சு மாமரம்’, மே.கு.நூ., பக். 135-148.
6. திலகவதி, ‘சாத்திரம் பேசுகின்றாய்’, மே.கு.நூ., ப. 196.
7. திலகவதி, ‘அரசிகள் அழுவதில்லை’, மே.கு.நூ., ப.258.